அனுப்புநர்

சா.சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி.

ந.க.எண். 019373 / எப்1 /2022 நாள். 23.03.2022

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மே 2022 பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவேற்றம் செய்வதற்கு கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – தேர்வுக் கட்டணம் செலுத்துதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:03.01.2022.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள்.19.01.2022 மற்றும் 02.02.2022.

------

பார்வையில் காணும் செயல்முறைகள் மற்றும் கடிதங்களின் வாயிலாக, மே 2022 பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்வதற்கும், பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

தற்போது, மே 2022 பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் விடுபட்ட மாணவர்களது பெயரை புதிதாக சேர்ப்பதற்கு **28.03.2022 முதல் 30.03.2022** வரையிலான நாட்களில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதனை முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு பின்வரும் வழிமுறைகளை பின்பற்றி பெயர்ப்பட்டியலை பதிவேற்றம் செய்ய அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் EMIS –ல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password– ஐ பயன்படுத்தி, EMIS Portal-ல் சென்று தற்போது தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பயிலும் பெயர்ப்பட்டியலில் புதிதாக சேர்க்க வேண்டிய மாணவர்களது விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளனவா என்பதனை சரிபார்க்க வேண்டும்.
2. அதன்பின், DGE Portal-க்கு (www.dge.tn.gov.in / http://apply1.tndge.org ) சென்று தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password– ஐ பயன்படுத்தி, Dashboard –ல் Pull Data Option-ஐ Click செய்ய வேண்டும்.

3. அதன்பின், Dashboard –ல் Apply Option-ஐ பயன்படுத்தி, SSLC / HSE First Year என்பதை Select செய்து பெயர்ப்பட்டியலில் புதிதாக சேர்க்க வேண்டிய மாணவர்களது பெயருக்கெதிரே உள்ள Apply Option-ஐ Click செய்து மாணவர்களது விவரங்களை சரிபார்த்தபின் Submit செய்தல் வேண்டும். இறுதியாக Declaration Form – ஐ Download செய்து கொள்ள வேண்டும்.

4. மேலும், ஏற்கனவே, EMIS Portal-ல் இருந்து DGE Portal-ல் Pull செய்யப்பட்ட பின், Apply Option-ஐ பயன்படுத்தி, பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபட்ட மாணவர்கள் எவரேனும் இருப்பின் அம்மாணவர்களின் விவரங்களை Apply Option –ஐ பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட நாட்களிலேயே பெயர்ப்பட்டியலில் பதிவேற்றம் செய்யலாம்.

5. மேற்குறிப்பிட்ட நாட்களிலேயே www.karuvoolam.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி மேற்குறிப்பிட்ட மாணவர்களுக்கு தேர்வுக்கட்டணம் செலுத்துமாறும் புதிய பள்ளியாக இருப்பின் TML கட்டணம் ரூ.300/– செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஏப்ரல் முதல் வாரத்தில் பொதுத்தேர்வுகளுக்கான முன்னிலைப் பணிகள் துவங்கவிருப்பதால், இப்பணிக்காக எக்காரணம் கொண்டும் கூடுதல் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது.**

எனவே, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு இப்பணியின் முக்கியத்துவம் அறிந்து தனிக்கவனம் செலுத்தி பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியினை **30.03.2022 –**க்குள் நிறைவு செய்வதற்கும், தேர்வுக் கட்டணம் (பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு) செலுத்துவதற்கும் உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**
தேர்வுக் கட்டணம் செலுத்துதல் தொடர்பான அறிவுரைகள்.

ஒம்/–
இயக்குநர்

<u>நகல்:</u>

1. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

– தகவலுக்காகக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்